# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள்** 20.09.2019

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6047/SCIC/2018**

திரு கா. அரசு திருவளவன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
மதுரை (தெற்கு) பேலஸ் சாலை, பொது அதிகார அமைப்பு
மதுரை -1.

**ஆணை**

இன்று (20.09.2019) இவ்வாணையத்தில் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு கா. அரசு திருவளவன், ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு நா. கண்ணன், உதவியாளர், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மதுரை (தெற்கு), மதுரை ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 02.06.2018 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்டப் பதிவாளர் (சங்கங்கள்) மதுரை தெற்கு, மதுரை அவர்களுக்கு தாக்கல் செய்துள்ள மனுவில் தென் மண்டல தெலுங்கு செட்டியார்கள் சங்கம் குறித்து கீழ் காணும் 1 முதல் 8 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார்:

1. இச்சங்கத்தின் நிர்வாகிகள் கமிட்டித் தேர்தல் கடந்த 07.03.2015 அன்று நடைபெற்று, தீர்மான நகலுடன், படிவம் 7, (புதிய நிர்வாகிகள்) தங்களிடம் சமர்பிக்கப்பட்டது. சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன்படி இந்த நிர்வாகக் கமிட்டியின் பதவி காலம் எந்தத் தேதியில் முடிவடைகிறது.
2. புதிய நிர்வாகிகளுக்கான தேர்தல் எந்தத் தேதியில் நடத்தப்பட வேண்டும்?
3. அல்லது பழைய நிர்வாகிகளின் பதிவு நீட்டிப்பு / மறு நியமனத்திற்கான தீர்மானம் பொதுத் குழுவால் இயற்றப்படும் பட்சத்தில், அதற்கான கூட்டம் எந்த தேதியில் நடத்தப்பட வேண்டும்?
4. மேற்கூறிய பத்தி 1ல் காண் படிவம் 7ன் நகலினை, தகவல் உரிமைச் சட்டப்படி, தாங்கள் எனக்கு 12.04.2016ல் வழங்கிய போது “கோர்வையின்றி, நிலுவையிலுள்ள ஆவணத்தின் நகல்கள்” என்ற மேற்குறிப்புடன் எனக்கு வழங்கப்பட்டது. இன்றைய தேதியில் இதன் நிலைமை என்ன? நிலுவையில் இருந்ததை நீக்கி, கோர்வை அங்கீகாரம் செய்யப்பட்டுவிட்டதா அல்லது
5. இன்னும் இது நிலுவையில் தான் உள்ளதா விபரம் தேவை, இன்னும் நிலுவையில்தான் வைக்கப்பெற்றுள்ளதெனில் அதற்கான காரணம் யாது என்ற விபரம் தேவை

6. தங்களின் ந.க.எண்.1647/இ1/2015 நாள் 27.12.2016 மற்றும் இதே எண் நாள் 27.01.2017ன் படி T.P. தேவராஜ் உள்ளிட்ட சில நபர்கள் இச்சங்கத்தின் (நிர்வாகிகள்) மீது பல புகார் மனுக்களை சமர்பித்தமை தொடர்பாக விளக்கம் கோரப்பட்டு, உரிய விளக்கங்கள் சமர்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
7. மேற்படி சங்க நிர்வாகத் தரப்பிலான விளக்கங்ள் ஏற்கப்பட்டுவிட்டனவா?
8. மேற்படி T.P. தேவராஜ் உள்ளிட்ட நபர்களின் புகார் மனுக்கள்தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டனவா. இந்த கோப்பு முடிக்கப்பட்டுவிட்டதா அல்லது நிலுவையிலுள்ளதா.

3. தகவல்கள் ஏதும் பெறப்படாததால் 05.07.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மாவட்டப் பதிவாளர், மதுரை தெற்கு, மதுரை அவர்களுக்கு தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார். இதனிடையே 02.07.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மதுரை, தெற்கு மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளார். அதில் மனுதாரரது மனு கேள்வி மற்றும் காரணங்கள் கேட்கும் வடிவில் அமைந்துள்ளது என்றும் தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆணை எண்.2282/பி/2014, நாள் 31.01.2014ன்படி கேள்விகள், காரணங்கள் மற்றும் தெளிவுரைகள் வழங்குவதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழிவகை இல்லையென்பதால் தங்களுக்கு தகவல் வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. திருப்தியடையாத மனுதாரர் 21.07.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்திற்கு ஒரு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனு வழக்கு எண்.SA-5329/மா.த.த.ஆ/2018 ஆக அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் 05.12.2018 அன்று ஆணை வழங்கப்பட்டது. இது குறித்து பொது அதிகார அமைப்பும் 07.01.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு பதில் அனுப்பிவிட்டு அதன் நகலை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளது. இதன் பிறகு மீண்டும் மனுதாரர் மீண்டும் 17.08.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒரு புகார் மனுவினை ஆணையத்திற்கு அனுப்பி தனக்கு தகவல்கள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும், பொதுத் தகவல் அலுவலர் மீது பிரிவு 20ன் கீழ் நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்துள்ளார். அதன் பேரில் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆஜராக ஆணையத்திலிருந்து அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு அதன் பேரில் மனுதாரர் திரு அரசு திருவளவன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு செ. செந்தமிழ்ச் செல்வன், பொதுத் தகவல் அலுவலர், மாவட்டப் பதிவாளர் நிர்வாகம், மதுரை அவர்கள் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும் தனது சார்பாக திரு நா. கண்ணன் உதவியாளர் என்பவரை விசாரணையில் கலந்துக் கொள்ள அனுமதிக்குமாறு தெரிவித்து 19.09.2018 நாளிட்டு ஆணையத்திற்கு கடிதம் தெரிவித்துள்ளார். திரு நா. கண்ணன் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான அலுவலர் மனுதாரருக்கு முதலில் கேள்விகள் மற்றும் தெளிவுரைகள் கேட்கப்பட்டதால் தகவல் வழங்க வழியில்லை என பதில் அளித்துள்ளதாகவும் பின்னர், 20.08.2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மீண்டும் 02.07.2018 நாளிட்ட பதில் கடிதம் அனுப்பப்பட்டது என்றும் பின்னர் மனுதாரர் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு தாக்கல் செய்த மனுவின் நகலினை தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியதால் அதன் பேரில் 03.10.2018 தேதியிட்டு ஒரு பதில் கடிதம் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது என்றும் இதன் விவரங்கள் ஆணையத்திற்கு 07.01.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது என்றும், இதனை தவிர்த்து மேல்முறையீட்டு அலுவலர் என்ற வகையில் துணைப் பதிவுத் துறைத் தலைவர், மதுரை அவர்கள் 15.10.2018 நாளிட்டு மனுதாரருக்கு ஒரு பதில் கடிதம் அனுப்பியதாக தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன் பொது அதிகார அமைப்பின் சார்பாக வந்திருந்த அலுவலர் சமர்பித்தார்.

5. ஆணையத்தின் முன் சமர்பித்த ஆவணங்களை பரிசீலிக்கையில் பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையம் கருதுகிறது. மேலும் 03.10.2018 தேதியிட்ட கடிதத்தினை பரிசீலிக்கையில் ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ய தவறி உள்ளார். மேலும்

மேற்குறிப்பிட்ட சங்கத்தின் மீது வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது என்பதையும் இவ்விசாரணையின் மூலம் அறிய முடிகிறது. எனவே தவறான தகவல்கள் வழங்கியதாக பொது தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க எவ்வித முகாந்திரமும் இவ்வழக்கில் காணப்படவில்லையென்று கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 6047/SCIC/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
மதுரை (தெற்கு) பேலஸ் சாலை,
மதுரை -1.

**மனுதாரர்**

திரு கா. அரசு திருவளவன்
9, பவானி வீதி, ஆனந்தா நகர்,
H.M.S காலனி, மதுரை 625 016.
*JJ/PA 26.09.2019*